தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# தாவர எண்ணிக்கையில் தமிழகத்துக்கு இரண்டாமிடம்

**கோவை, ஏப்.7–**

வனப்பகுதியில் அதிக தாவரங்களை கொண்டிருக்கும் மாநிலங்களில், தமிழகம் இரண்டாமிடத்தில் உள்ளது.

நாடு முழுவதும் இருக்கும் வனப்பரப்பு, எத்தகைய நிலையில் இருக்கிறது என்பதை, 'பாரஸ்ட் சர்வே ஆப் இந்தியா' நிறுவனம் ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

இந்த ஆய்வின்படி, கர்நாடகா, தமிழகம், ஆந்திரா, கேரளா ஆகியவை, அதிக மரங்கள், மரப்பன்மை கொண்டுள்ள முதல், 5 மாநிலங்களாக உள்ளன.

இது குறித்து, வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவன முதுநிலை முதன்மை விஞ்ஞானி டாக்டர் கண்ணன் வாரியர் கூறியதாவது:

நாடு முழுவதும் 8500 இடங்களில் நடத்தப்பட்ட ஆய்வில், 3794 மர வகைகள் இருப்பது கண்டறியப்பட்டது. இதில் கர்நாடகாவில் 325, தமிழகம் 252, ஆந்திரா 242, கேரளா 238, ஒடிசா 192 மர வகைகள் உள்ளன. நாட்டில் அதிக வனப்பரப்பை கொண்டுள்ள மாநிலமான ம.பி.,யில், 146 மர வகைகளே உள்ளன.

அதிக தாவரங்களை கொண்டுள்ள மாநிலங்கள் பட்டியலில், 737 தாவரங்களுடன் அருணாச்சல பிரதேசம் முதலிடத்திலும், 652 தாவரங்களுடன் தமிழகம் இரண்டாமிடத்திலும் உள்ளது.

கர்நாடகா 505 தாவரங்களுடன் மூன்றாமிடத்தில் உள்ளது. இதில் மரங்கள், புதர்ச் செடிகள், மூலிகை செடிகள் ஆகியவையும் அடக்கம்.

இவ்வாறு, அவர் கூறினார்.

173. News in Dinamalar, 07.04.2020, Floristic Diversity Studies Based on Sample Plots.